# அவர் நமக்கு தீர்க்கதரிசிகளைக் கொடுத்தார்

பாடம் 3

உடன்படிக்கைகளின் மக்கள்

Manuscript

thirdmill

Biblical Education. For the World. For Free.

© 2021 by Third Millennium Ministries

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்த வெளியீட்டின் எந்த பகுதியும் Third Millennium Ministries,Inc. 316 Live Oaks Blvd., Casselberry, Florida 32707. இன் வெளியீட்டாளரினுடைய எழுத்துப்பூர்வ அனுமதியின்றி எந்தவொரு வடிவத்திலும் அல்லது லாபத்திற்கான எந்த வகையிலும் மீண்டும் உருவாக்கப்படக் கூடாது. மதிப்பாய்வுக்கோ, கருத்து தெரிவிக்கவோ அல்லது ஆழ்ந்த அறிவுத்திறன் சம்பந்தப்பட்ட நோக்கங்களுக்காகவோ சுருக்கமான மேற்கோள்களாக எடுக்கப்படலாம்.

சுட்டிக்காட்டப்படாவிட்டால் எல்லா வேத மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து வந்தவை, The Bible Society of India Version Tamil-O.V. (New Orhto), copyright © 2018 . அனுமதியுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

## THIRDMILL ஊழியத்தைப் பற்றி

1997 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த Thirdmill ஒரு இலாப நோக்கம் இல்லாத சுவிசேஷ மார்க்க கிறிஸ்தவ ஊழியமாகும்.

**வேதாகம கல்வி. உலகத்திற்காக. இலவசமாக.**

ஊழியத்திற்கு போதுமான பயிற்சி இல்லாத உலகெங்கிலும் உள்ள நூறாயிரக்கணக்கான போதகர்கள் மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுக்கு இலவச கிறிஸ்தவ கல்வியை வழங்குவதே எங்கள் குறிக்கோளாகும். ஆங்கிலம், அரபு, மாண்டரின், ரஷ்ய மற்றும் ஸ்பெயின் நாட்டு மொழிகளில் இணையற்ற பல்லூடகவியல் பாடசாலை பாடத்திட்டத்தை உருவாக்கி உலகளவில் விநியோகிப்பதன் மூலம் இந்த இலக்கை அடைகிறோம். எங்கள் பாடத்திட்டம் எங்கள் கூட்டு ஊழியங்கள் மூலம் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகிறது. இந்த பாடத்திட்டத்தில் வரைகலை மூலம் இயக்கப்படும் காணொளி காட்சிகள், அச்சிடப்பட்ட கல்வி உபகரணங்கள் மற்றும் இணைய வழி கல்வி உபகரணங்கள் உள்ளன. இது இணைய வழியாகவும் நேரடியான கல்வி நிலையங்கள் மூலமாகவும் கற்றுக்கொடுப்பதற்கு பள்ளிகள், குழுக்கள் மற்றும் தனிநபர்களால் பயன்படுத்தப்படும் பொருட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக, மிகச்சிறந்த உள்ளடக்கம் மற்றும் தரத்திற்கான விருது பெற்ற பல்லூடகவியல் பாடங்களை உருவாக்கும் அதிக செலவு குறைந்த முறையை நாங்கள் உருவாக்கியுள்ளோம். எங்கள் எழுத்தாளர்கள் மற்றும் தொகுப்பாளர்கள் இறையியல் ரீதியாக பயிற்சி பெற்ற கல்வியாளர்கள் ஆவர், எங்கள் மொழிப் பெயர்ப்பாளர்கள் அவர்களின் சொந்த மொழிகளில் இறையியல் புலமை பெற்றவர்கள், மற்றும் எங்கள் பாடங்களில் உலகெங்கிலும் உள்ள நூற்றுக்கணக்கான மரியாதைக்குரிய பாடசாலை பேராசிரியர்கள் மற்றும் போதகர்களின் நுண்ணறிவு உள்ளது. இதனோடு கூட,

எங்கள் வரைகலை வடிவமைப்பாளர்கள், விளக்குபவர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் அதிநவீன உபகரணங்கள் மற்றும் நுட்பங்களைப் பயன்படுத்தி மிக உயர்ந்த உற்பத்தித் தரங்களை வழங்குகின்றனர்.

எங்கள் விநியோக இலக்குகளை நிறைவேற்றுவதற்காக, Thirdmill ஊழியமானது சபைகள், பாடசாலைகள், வேதாகம பள்ளிகள், மிஷனரி ஊழியர்கள், கிறிஸ்தவ ஒளிபரப்பாளர்கள் மற்றும் செயற்கைக்கோள் தொலைக்காட்சி வழங்குநர்கள் மற்றும் பிற அமைப்புகளுடன் திறம் சார்ந்த கூட்டாண்மைகளை உருவாக்கியுள்ளது. இந்த உறவுகள் ஏற்கனவே தனியாக ஊழியம் செய்கிற தலைவர்கள், போதகர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு எண்ணற்ற காணொளி பாடங்களை விநியோகித்துள்ளன. எங்கள் வலைத்தளங்கள் விநியோகத்திற்கான வழிகளாக உள்ளன. மேலும் உங்கள் சொந்த கற்றல் சமூகத்தை எவ்வாறு தொடங்குவது என்பதற்கான பாட உபகரணங்களையும் எங்கள் பாடங்களுக்கு கூடுதல் உபகரணங்களையும் வழங்குகின்றன.

Thirdmill ஊழியம் IRS என்கிற அமைப்பினால் 501(c)(3) கழகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சபைகள், நிறுவனங்கள், வணிகங்கள் மற்றும் தனிநபர்களின் தாராளமான, வரி விலக்கு பெற்ற பங்களிப்புகளை நாங்கள் சார்ந்து இருக்கிறோம். எங்கள் ஊழியத்தைப் பற்றிய கூடுதல் தகவலைப் பெறுவதற்கும் நீங்கள் எவ்வாறு ஈடுபடலாம் என்பதை அறிவதற்கும் தயவுசெய்து www.thirdmill.org. யைப் பார்வையிடவும்.

# பொருளடக்கம்


**முன்னுரை ........ 1**

**உடன்படிக்கையில் மனிதகுலம் ........ 1**

**மைய கவலைகள் ........ 2**

ஆதாம் ........ 2

நோவா ........ 4

**தீர்க்கதரிசிகளின் சார்பு ........ 5**

தேசங்களின் பாவங்கள் ........ 6

தேசங்களுக்கான மீட்பு ........ 6

**உடன்படிக்கையில் இஸ்ரவேல் ........ 8**

**ஆபிரகாம் ........ 8**

மைய கவலைகள் ........ 9

தீர்க்கதரிசிகளின் சார்பு ........ 9

**மோசே ........ 10**

மைய கவலைகள் ........ 10

தீர்க்கதரிசிகளின் சார்பு ........ 11

**தாவீது ........ 11**

மைய கவலைகள் ........ 12

தீர்க்கதரிசிகளின் சார்பு ........ 12

**புது உடன்படிக்கை ........ 13**

**உடன்படிக்கையில் இரட்சிப்பு ........ 14**

**வெளி உடன்படிக்கை ........ 15**

**காணக்கூடிய உடன்படிக்கை ........ 16**

**கண்ணுக்குத் தெரியாத உடன்படிக்கை ........ 19**

**முடிவுரை ........ 23**

# முன்னுரை

"இந்த வேலை மக்களுக்காக இல்லையென்றால் நன்றாக இருக்கும்" என்று போதகரைப் பற்றி கூறப்பட்ட பழைய நகைச்சுவையை நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். நம் வாழ்வின் காரியங்கள் பெருவாரியான பகுதிகளில் இப்படித்தான் உள்ளது என்று நினைக்கிறேன். நாம் சமாளிக்க வேண்டிய மக்கள் இல்லையென்றால் வாழ்க்கை நன்றாக இருந்திருக்கும், ஆனால் உண்மை என்னவென்றால், நாம் மக்களிடமிருந்து தப்பிக்க முடியாது. வாழ்க்கை நம்மைச் சுற்றியுள்ள மற்றவர்களால் ஆனது. பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் அப்படித்தான் இருந்தார்கள். மக்களையும் அவர்கள் கையாண்டனர்.

இந்த காரணத்திற்காக, இந்த பாடத்திற்கு "உடன்படிக்கையின் மக்கள்" என்று பெயரிட்டுள்ளோம். நாம் மூன்று கருத்துக்களை ஆராய்வோம்: முதலாவதாக, பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் தேவனுக்கும் எல்லா மக்களுக்கும் இடையிலான உடன்படிக்கை உறவை எவ்வாறு பார்த்தார்கள்? இரண்டாவதாக, உடன்படிக்கை உறவின் மூலம் இஸ்ரவேல் மக்கள் வகித்த சிறப்பு பங்கு என்ன? பின்னர், இறுதியாக, உடன்படிக்கை சமூகத்தில் இரட்சிப்பு என்பதாகும். பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசிகள் தேவனுடனான உடன்படிக்கையில் மனிதகுலம் முழுவதையும் புரிந்துகொண்ட விதத்தை முதலில் பார்ப்போம்.

# உடன்படிக்கையில் மனிதகுலம்

மனிதர்களைப் பற்றி நமக்குத் தெரிந்த ஒரு விஷயம் என்றால், அவர்கள் ஒருவருக்கொருவர் வேறுபட்டவர்கள் என்பதாகும். நாம் வெவ்வேறு கலாச்சாரங்களிலிருந்து வந்தவர்கள், நாம் வெவ்வேறு ஆளுமைகளைக் கொண்டுள்ளோம். ஆனால் அதே நேரத்தில், எல்லா மக்களுக்கும் பொதுவான சில விஷயங்கள் இருப்பதை நாம் அறிவோம். எல்லோருக்கும் பசிக்கிறது. நம் அனைவருக்கும் ஒரு நண்பர் தேவை. நாம் அனைவரும் வரி செலுத்துகிறோம். மக்களுக்கும் இது பொருந்தும் என்பதை தீர்க்கதரிசிகள் அறிந்திருந்தார்கள். தேவன் இஸ்ரவேலைத் தம்முடைய விசேஷ ஜனமாகத் தேர்ந்தெடுத்திருந்தபடியால், பூமியின் வெவ்வேறு ஜாதிகள் கர்த்தரால்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வித்தியாசமாக நடத்தப்பட்டன என்பதை அவர்கள் புரிந்துகொண்டார்கள். ஆனால் அதே நேரத்தில் தேவன் பூமியின் எல்லா ஜாதிகளுடனும் உடன்படிக்கை செய்து கொண்டார் என்பதை தீர்க்கதரிசிகள் அறிந்திருந்தார்கள்.

இந்த உலகளாவிய உடன்படிக்கைகளையும், தீர்க்கதரிசிகள் இந்த உடன்படிக்கைகளை பூமியின் தேசங்களுக்கு எவ்வாறு பிரதிநிதித்துவப்படுத்தினார்கள் என்பதையும் எங்கள் பாடத்தின் இந்த பகுதியில் நாம் ஆராயப் போகிறோம். வெவ்வேறு கிறிஸ்தவ குழுக்கள் உடன்படிக்கைகளை வித்தியாசமாகக் கையாண்டாலும், பல கிறிஸ்தவ மரபுகள் பழைய ஏற்பாட்டில் ஐந்து முக்கிய உடன்படிக்கை நிகழ்வுகளைக் கண்டுள்ளன. இந்நிகழ்வுகள் வேதத்தின் வரலாற்றை கணிசமாக வடிவமைத்தன. ஐந்து வெவ்வேறு காலகட்டங்களில் தேவன் தனக்கும் தம் மக்களுக்கும் இடையே பிரதிநிதித்துவத் தலைவர்கள் மூலம் உடன்படிக்கைகளை ஏற்படுத்தினார். ஆதாம், நோவா, ஆபிரகாம், மோசே, தாவீது என்பவர்கள் இந்தப் பிரதிநிதிகள் ஆவர்.

## மைய கவலைகள்

பழைய ஏற்பாட்டின் முதல் இரண்டு உடன்படிக்கைகளான ஆதாம் மற்றும் நோவாவுடனான உடன்படிக்கைகள், உலகளாவிய உடன்படிக்கைகளாக இருந்ததால் மற்றவற்றிலிருந்து வேறுபடுகின்றன. இவை தேவனுக்கும் மனிதகுலம் முழுவதற்கும் இடையில் நிறுவப்பட்ட உடன்படிக்கைகளாகும். அவை ஒரு குறிப்பிட்ட மக்களுக்கானவை அல்ல, அனைத்து மக்களுக்கானவை. அவைகள் தேவனுக்கும் என்றும் வாழும் ஒவ்வொரு மனிதனுக்கும் இடையில் நிரந்தரமான ஏற்பாடுகளை நிறுவின. இந்த உலகளாவிய உடன்படிக்கைகள் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளுக்கு முக்கியமான இறையியல் நோக்குநிலைகளை வழங்கின, ஏனெனில் அவைகள் தேவனுடைய உடன்படிக்கை தூதுவர்களாக செயல்பட்டன. இந்த உலகளாவிய உடன்படிக்கைகளை நாம் ஆராயும்போது, இரண்டு வெவ்வேறு சிக்கல்களைப் பார்ப்போம்: முதலாவதாக, இந்த உலகளாவிய உடன்படிக்கைகளின் மையக் கவலைகள் யாவை? இரண்டாவதாக, தீர்க்கதரிசிகளின் ஊழியங்கள் இந்த உடன்படிக்கைகளை எவ்வாறு சார்ந்திருந்தன? ஆதாம் மற்றும் நோவாவுடனான உடன்படிக்கைகளின் மைய கவலைகளை முதலில் பார்ப்போம்.

### ஆதாம்

வேதத்தில் உள்ள முதல் உடன்படிக்கை தேவன் ஆதாமுடன் ஏற்படுத்திய உடன்படிக்கையாகும். இந்த உடன்படிக்கை பாரம்பரியமாக ”கிரியைகளின்

உடன்படிக்கை” என்று அழைக்கப்படுகிறது. நம்முடைய காலத்தில் பல இறையியலாளர்கள் இதை உடன்படிக்கை என்று சொல்லக்கூடாது என்று நினைக்கிறார்கள், நிச்சயமாக, ”உடன்படிக்கை” என்ற சொல் ஆதியாகமம் 1-3 இல் பயன்படுத்தப்படவில்லை. மேலும், ஆதாமுடன் செய்யப்பட்ட இந்த உடன்படிக்கையில் கிரியைகளுக்கு மேலானது இருந்தது. தேவன் தனக்கும் ஆதாமுக்கும் இடையில் செய்த ஒரு ”ஏற்பாடு” என்று இதைப் பேசுவது நல்லது. ஆனால் ஆதாமின் நாட்களில், தேவன் சில தூண்களை நிறுவினார், அவை வேதத்தின் அனைத்து வரலாறு முழுவதும் நடைமுறையில் உள்ளன.

ஆதாமின் காலத்தில் குறைந்தது மூன்று தூண்கள் நிறுவப்பட்டன, அவை வேதத்தின் முழு வரலாற்றிலும் நிலைத்திருக்கின்றன. இந்த தூண்கள் மனித பொறுப்பு, மனித ஊழல் மற்றும் மனித மீட்பு ஆகியனவாகும். முதலாவதாக, ஆதாமின் நாட்களில் தேவன் மனித பொறுப்பை விதித்தார். தேவன் இந்த உலகத்தில் மனித இனத்தைத் தம்முடைய சாயலாகப் படைத்தார், ஆதியாகமம் 1:26-ல் தேவன் முதன்முதலில் மனிதர்களைப் பற்றிப் பேசியபோது, அவர் பின்வரும் வார்த்தைகளைச் சொன்னார்:

> நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருகஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள் (ஆதியாகமம் 1:26).

எல்லா மனிதர்களும் தேவனின் சாயல்கள், எனவே இந்த உலகில் அவரது ராஜ்யத்தை பிரதிநிதித்துவப்படுத்த வேண்டிய பொறுப்பு அவர்களுக்கு உள்ளது. பூமியின் ஒவ்வொரு பகுதியிலும் தேவனை மகிமைப்படுத்தும் வழிகளில் மனிதர்கள் வாழ வேண்டும். வேதத்தின் ஒவ்வொரு பகுதியையும் போலவே, ஒவ்வொரு தேசத்தின் அனைத்து மக்களும் ஆதாமின் நாட்களில் இந்த பரிசுத்த பொறுப்பைப் பெற்றனர் என்பதை தீர்க்கதரிசிகள் புரிந்துகொண்டனர்.

இதற்கும் அப்பால், ஆதாமுடனான ஏற்பாடு அனைத்து மனிதர்களும் ஊழலால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை நிறுவியது. வேதத்தின் முழு வரலாறும் மிகத் தெளிவாக விளக்குவது போல, ஆதியாகமம் 3 இன் நிகழ்வுகள் ஆதாம் மற்றும் ஏவாளின் வாழ்க்கையுடன் தனிமைப்படுத்தப்படவில்லை. ஆதாமின் பாவத்தின் காரணமாக, முழு மனித இனமும் பாவமாகி, தேவனுடைய நியாயத்தீர்ப்பின் கீழ் நிற்கிறது என்று 5 ஆம் அதிகாரத்தில் ரோமர் புத்தகம் போதிக்கிறது. உலக தேசங்கள் தங்கள் சிருஷ்டிகரிடமிருந்து விலகிச் சென்றுவிட்டதையும், அவருடைய சாயல் என்ற தங்கள்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பொறுப்புகளிலிருந்து அவர்கள் விலகிச் சென்றதையும் காண தீர்க்கதரிசிகள் வெகுதூரம் பார்க்க வேண்டியதில்லை.

இதற்கும் அப்பால், ஆதாமுடனான ஏற்பாடு மனிதகுலத்திற்கு மீட்பின் நம்பிக்கையையும் நிறுவியது. ஆதியாகமம் 3:15ல், ஆதாமையும் ஏவாளையும் சோதித்த தீய சர்ப்பத்தை தேவன் சபித்தார். அங்கே அவர் ஒரு நாள் ஏவாளின் சந்ததி சர்ப்பத்தின் தலையை நசுக்கும் என்று வாக்குத்தத்தம் அளித்தார். பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசிகள் இறுதியில் தீமை மற்றும் மரணத்தின் மீதான வெற்றி பூமியில் உள்ள ஒவ்வொரு நாட்டிற்கும் வரும் என்பதைப் புரிந்துகொண்டனர். மனிதப் பொறுப்பு, ஊழல் மற்றும் மீட்பின் இந்த அடிப்படைத் தூண்கள் வரலாறு முழுவதும் தெய்வீக, மனித தொடர்புகளின் கட்டமைப்புகளை நிறுவின. அவை முழு மனித இனத்திற்கும் விரிவடைகின்றன.

## நோவா

தேவனுக்கும் நோவாவுக்கும் இடையில் செய்யப்பட்ட இரண்டாவது உலகளாவிய உடன்படிக்கையின் முக்கிய கவலைகளுக்கு இப்போது வருவோம். எளிமையாகச் சொல்வதானால், தேவன் ஆதாமுடைய ஏற்பாட்டின் கட்டமைப்புகளை மேம்படுத்தினார், ஆனால் பௌதீக பிரபஞ்சத்திற்கான ஸ்திரத்தன்மையின் அம்சத்தைச் சேர்த்தார். ஜலப்பிரளயத்திற்குப் பிறகு, மனிதர்கள் ஒவ்வொரு முறை பாவம் செய்யும் போதும் உடனடியாக தண்டிக்க மாட்டேன் என்பதை நிரூபிக்க தேவன் தனது வில்லை மேகங்களில் வைத்தார். அதற்குப் பதிலாக, தேவன் ஒரு புதிய முறையை வாக்குத்தத்தம் செய்தார், அதில் அவர் நம் பாவங்களுக்கு பொறுமையாக இருப்பார். ஆதியாகமம் 8:22-ல் தேவன் இவ்வாறு அறிவித்தார்:

> பூமியுள்ள நாளளவும் விதைப்பும் அறுப்பும், சீதளமும் உஷ்ணமும், கோடைகாலமும் மாரிகாலமும், பகலும் இரவும் ஒழிவதில்லை (ஆதியாகமம் 8:22).

இயற்கையான ஸ்திரத்தன்மையின் இந்த வாக்குத்தத்தத்தை தேவன் ஏன் கொடுத்தார்? அவரது மையக் கவலை என்ன? நோவாவின் காலத்தில் கொடுக்கப்பட்ட பிரபஞ்சத்தின் ஸ்திரத்தன்மைக்கு குறைந்தது இரண்டு முக்கிய காரணங்கள் உள்ளன. முதலாவதாக, தேவன் மனித இனத்துடன் தனது பொறுமையைக் காட்டினார். இந்த நோக்கம் நியூ அமெரிக்கன் ஸ்டான்டார்டு வேதாகமத்தில் ஆதியாகமம் 8:21 மொழிபெயர்ப்பில் தெளிவாகிறது:

> "இனி நான் மனுஷன் நிமித்தம் பூமியைச் சபிப்பதில்லை; மனுஷனுடைய இருதயத்தின் நினைவுகள் அவன் சிறுவயதுதொடங்கி பொல்லாததாயிருக்கிறது; நான்

> இப்பொழுது செய்ததுபோல, இனி சகல ஜீவன்களையும் சங்கரிப்பதில்லை" என்று கர்த்தர் சொன்னார் (ஆதியாகமம் 8:21).

மனிதர்களின் ஒட்டுமொத்த சீரழிவையும் தேவன் அறிந்து, நாம் பாவம் செய்யும் ஒவ்வொரு முறையும் உலகத்தை அழிக்காமல் பொறுமையாக இருக்க தீர்மானித்தார் என்று இந்த வசனம் நமக்குக் கூறுகிறது.
நோவாவுடனான உடன்படிக்கையில் இயற்கையின் ஸ்திரத்தன்மைக்கான இரண்டாவது நோக்கமும் தெளிவாகத் தெரிகிறது. தேவன் நமக்கு ஒரு ஒழுங்கான உலகத்தைக் கொடுத்துள்ளார், இதனால் அவரது சாயலாக சேவை செய்ய நம் மனித விதியை நிறைவேற்ற முடியும். ஆதியாகமம் 9:1,3 ஜலப்பிரளயத்திற்குப் பிறகு தேவன் எல்லா ஜனங்களின் பிதாவாகிய நோவாவிடம் பேசி, இந்த வார்த்தைகளைச் சொன்னார் என்று கூறுகிறது:

> பின்பு தேவன் நோவாவையும், அவன் குமாரரையும் ஆசீர்வதித்து: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்புங்கள். நடமாடுகிற ஜீவஜந்துக்கள் யாவும், அவைகள் எல்லாவற்றையும் உங்களுக்குத் தந்தேன் என்றார் (ஆதியாகமம் 9:1, 3).

ஆதியாகமம் 1-ல் ஆதாமிடம் முதன்முதலில் பேசிய வார்த்தைகளை அடிப்படையாகக் கொண்டு, தேவன் தம்முடைய சாயலாக சேவை செய்ய வேண்டிய எல்லா தேசங்களின் பொறுப்பையும் மீண்டும் உறுதிப்படுத்தினார். ஆகவே, தேவன் பொறுமையாக இருந்து, மனித இனத்திற்கு ஒரு நிலையான உலகத்தை வழங்குவதாக வாக்களித்தார் என்பதை நாம் காண்கிறோம், இதனால் பூமியின் அனைத்து தேசங்களும் அவரது சாயலாக அவருக்கு சேவை செய்ய முடியும்.

வேதத்தில் உள்ள முதல் உடன்படிக்கைகளின் முக்கிய கவலைகள் ஒரே மாதிரியாக இருக்கின்றன. ஆதாமுடன், தேவன் பொறுப்பு, ஊழல் மற்றும் மீட்பு ஆகியவற்றின் தூண்களை நிறுவியுள்ளார். நோவாவுடன் சேர்ந்து, தெய்வீக பொறுமையுடனும், தேவனுடைய சாயல்களாக நமது மனித விதியை மீண்டும் உறுதிப்படுத்தியும் இந்த கொள்கைகளைத் தொடர்ந்தார்.

## தீர்க்கதரிசிகளின் சார்பு

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளின் ஊழியங்கள் இந்த உலகளாவிய உடன்படிக்கைகளை எவ்வாறு சார்ந்திருந்தன? என்கிற இரண்டாவது கேள்வியை நாம் கேட்க வேண்டும். பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசிகள் ஆதாமையும் நோவாவையும் அடிக்கடி வெளிப்படையாகக் குறிப்பிடவில்லை



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். பெரும்பாலும், ஆதாம் மற்றும் நோவாவுடனான உடன்படிக்கைகளிலிருந்து பெறப்பட்ட இறையியல் முன்னோக்குகள் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் கூறியவற்றுக்குப் பின்னால் மறைமுகமாக உள்ளன. தீர்க்கதரிசிகள் இந்த உடன்படிக்கைகளைச் சார்ந்திருந்த மிக முக்கியமான வழி புறஜாதியினரின் மீது அவர்கள் கவனம் செலுத்துவதாகும்.

தேவனுடைய உடன்படிக்கை தூதுவர்களாக, பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் தங்கள் கவனத்தை இஸ்ரவேல் தேசத்தின் மீது செலுத்தினார்கள், ஆனால் அவர்கள் உலக தேசங்களுக்கான தூதுவர்களாகவும் இருந்தனர். எரேமியா 1:5-ல் ஊழியம் செய்ய எரேமியாவை முதன்முதலில் அழைத்தபோது தேவன் அவரிடம் இவ்வாறு கூறினார்:

> உன்னை ஜாதிகளுக்குத் தீர்க்கதரிசியாகக் கட்டளையிட்டேன் என்று சொன்னார் (எரேமியா 1:5).

ஆதாம் மற்றும் நோவாவுடனான உலகளாவிய உடன்படிக்கைகளின் தூதுவர்களாக இருந்ததால் தீர்க்கதரிசிகள் அடிக்கடி புற தேசங்களுடன் உரையாற்றினர்.

## தேசங்களின் பாவங்கள்

தேசங்கள் மீதான தீர்க்கதரிசன அக்கறை இரண்டு திசைகளில் சென்றது. முதலாவதாக, தீர்க்கதரிசிகள் வழக்கமாக தேசங்களின் பாவங்களைச் சுட்டிக்காட்டி, அவர்களுக்கு எதிரான தேவனுடைய நியாயத்தீர்ப்பைக் கூறி அச்சுறுத்தினார்கள். எடுத்துக்காட்டாக, ஒபதியாவின் முழு புத்தகமும் ஏதோமின் பாவங்களை வெளிப்படுத்துவதற்கும் தெய்வீக நியாயத்தீர்ப்பை அறிவிப்பதற்கும் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. நினிவே நகருக்கு ஊழியம் செய்ததாக யோனா தெரிவிக்கிறார். அசீரியாவுக்கு எதிரான தேவனுடைய தீர்ப்பை நாகூம் அறிவித்தார். மற்ற புத்தகங்களின் பெரும்பகுதி இஸ்ரவேல் அல்லாத பிற தேசங்களுக்கு எதிராக வரும் யெகோவாவின் கோபத்தை மையமாகக் கொண்டுள்ளது. எல்லா மக்களும் பாவிகள், தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கு உட்பட்டவர்கள் என்று தீர்க்கதரிசிகள் நம்பினார்கள் என்பதை பல வசனங்கள் தெளிவுபடுத்துகின்றன.

## தேசங்களுக்கான மீட்பு

தீர்க்கதரிசிகள் தேசங்களுக்கு ஆற்றிய உரைகளில் நியாயத்தீர்ப்பின் கருப்பொருள் பிரதானமாக இருந்தபோதிலும், தேசங்களுக்கான மீட்பின் கருப்பொருளான இரண்டாவது கருப்பொருளையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். தீர்க்கதரிசிகள் பூமியின் தேசங்களுக்கு பெரும் ஆசீர்வாதங்களின்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

எதிர்காலத்தைப் பற்றி அடிக்கடி பேசினார்கள். அவர்களின் பார்வையில், எதிர்காலம் ஒவ்வொரு இனத்திற்கும் மொழிக்கும் மீட்பின் நம்பிக்கையைக் கொண்டிருந்தது. பாவம் மற்றும் மரணத்தின் ஆளுகையிலிருந்து ஒரே ஒரு தேசம் மட்டுமே காப்பாற்றப்படும் என்பது தேவனுடைய திட்டம் அல்ல. மாறாக, மனித இனத்திற்கான தனது அசல் வடிவமைப்பை நிறைவேற்றுவதற்காக, தேவன் எப்போதும் ஒவ்வொரு நாட்டிலிருந்தும் மக்களை மீட்க விரும்பினார்.

இந்த காரணத்திற்காக, தீர்க்கதரிசிகள் இஸ்ரவேலருடைய சிறையிருப்பில் இருந்து மீட்கப்படும் ஒரு பெரிய ஆசீர்வாத நாளை எதிர்பார்த்தது மட்டுமல்லாமல்; அதற்குப் பதிலாக, புறஜாதி நாடுகளிலிருந்து அநேகர் சிறையிருப்பில் இருந்து இந்த மகத்தான மீட்பில் பங்கேற்பார்கள். உதாரணமாக, ஏசாயா 25:6-8-ல், தீர்க்கதரிசி எதிர்காலத்தில் ஒரு நாளை அறிவித்தார்:

> சேனைகளின் கர்த்தர் இந்த மலையிலே சகல ஜனங்களுக்கும் ஒரு விருந்தை ஆயத்தப்படுத்துவார்… சகல ஜனங்கள்மேலுமுள்ள முக்காட்டையும், சகல ஜாதிகளையும் மூடியிருக்கிற மூடலையும், இந்த மலையிலே அகற்றிப்போடுவார். அவர் மரணத்தை ஜெயமாக விழுங்குவார் (ஏசாயா 25:6-8).

எரேமியா 3:17-லும் இதே போன்ற ஒரு கருப்பொருள் காணப்படுகிறது:

> சகல ஜாதியாரும் எருசலேமில் விளங்கிய கர்த்தருடைய நாமத்தினிமித்தம் அதினிடமாகச் சேர்வார்கள். அவர்கள் இனித் தங்கள் பொல்லாத இருதயத்தின் இச்சையின்படி நடவார்கள் (எரேமியா 3:17).

தேவனுக்கு எதிரான கலகத்திலிருந்து புறஜாதிகள் கூட மனந்திரும்பும் நாள் வரும் என்று பல தீர்க்கதரிசிகள் அறிவித்தனர். அவர்கள் இஸ்ரவேலுக்கு வந்து தெய்வீக நியாயத்தீர்ப்பிலிருந்து இரட்சிப்பைக் காண்பார்கள். கிறிஸ்துவின் சுவிசேஷத்தை உலகம் முழுவதும் பரப்புவதில் இந்த வாக்குத்தத்தம் நிறைவேறுகிறது என்பதை கிறிஸ்தவர்களாகிய நாம் அறிவோம். கிறிஸ்து தம்முடைய அப்போஸ்தலர்களை எல்லா தேசங்களுக்கும் போகச் சொன்னபோது, பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் பூமியின் தேசங்கள் மீது வைத்திருந்த நேர்மறையான நம்பிக்கைகளை அவர் நிறைவேற்றிக் கொண்டிருந்தார்.

ஆகவே, ஆதாம், நோவாவின் நாட்களில், தேவன் உலகளாவிய உடன்படிக்கைகளில் நுழைந்தார், அவை எல்லா மக்களுக்கும் ஆனவை என்பதை நாம் காண்கிறோம். உலகெங்கும் ராஜாவாகிய தேவனுடைய தூதுவர்களாக, பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் தேவனுக்கு எதிரான



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தேசங்களின் கடுமையான மீறல்கள் குறித்து கவனத்தை ஈர்த்தனர். ஆனால் ஒரு நாள் தேவன் பூமியின் ஒவ்வொரு கோத்திரத்திலிருந்தும் தேசத்திலிருந்தும் மக்களை மீட்பார் என்றும் அவர்கள் அறிவித்தனர். ஆதாமிலும் நோவாவிலும் தேவன் எல்லா மக்களோடும் உடன்படிக்கைகள் செய்தார் என்பதை நாம் ஏற்கனவே பார்த்தோம். ஆனால் இப்போது நாம் தேவனுடைய விசேஷ உடன்படிக்கை மக்களாகிய இஸ்ரவேலின் பக்கம் நம் கவனத்தைத் திருப்பப் போகிறோம். இஸ்ரவேல் மக்களோடு தேவன் என்ன உடன்படிக்கைகளைச் செய்தார்?

# உடன்படிக்கையில் இஸ்ரவேல்

பெரும்பாலும் என் குடும்பம் வேத கல்லூரி மாணவர்களுக்கு விருந்துகளை வழங்குகிறது, ஆனால் சில நேரங்களில் பட்டியல் மிகவும் நீளமாக இருக்கும், அவர்கள் ஒவ்வொருவரையும் நாங்கள் அழைப்பதில்லை. அதற்கு பதிலாக, சில முக்கிய மாணவர்களை நாங்கள் தேர்வு செய்கிறோம், அவர்கள் மற்றவர்களை அழைக்கிறார்கள். பல விஷயங்களில், தேவன் இஸ்ரவேலருக்கு இதைத்தான் செய்தார். அவர்கள் அவருடைய முக்கிய மக்களாக இருந்தார்கள், மேலும் அவர் இஸ்ரவேலரை விசேஷ உடன்படிக்கைகளுடன் தன்னிடம் வரவழைத்தார், இதனால் இஸ்ரவேலால் எல்லா மக்களையும் தேவனிடம் ஊழியம் செய்யவோ அல்லது அழைக்கவோ முடிந்தது.

தேவன் இஸ்ரவேலரோடு மூன்று பெரிய உடன்படிக்கைகளை செய்தார் என்பதை நீங்கள் நினைவில் கொள்வீர்கள். ஆபிரகாம், மோசே, தாவீது ஆகியோருடன் தேவன் உடன்படிக்கைகளை செய்தார். இந்த உடன்படிக்கைகள் ஒவ்வொன்றும் இஸ்ரவேலை அதன் சொந்த இரட்சிப்பிற்காக மட்டுமல்ல, பூமியின் அனைத்து குடும்பங்களின் இரட்சிப்பிற்காகவும் விசேஷித்த வழிகளில் தயார் செய்தன. முதலில் ஆபிரகாமுடனான உடன்படிக்கையைப் பார்ப்போம்.

## ஆபிரகாம்

ஆபிரகாமுடனான தேவனுடைய உடன்படிக்கை சிறப்பு வாய்ந்தது, ஏனென்றால் முழு உலகத்திற்கும் தேவனின் கிருபையான மீட்பைச் சுமக்க தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரே குடும்பமாக இஸ்ரவேலை முதன்முதலில் அடையாளம் காட்டியது. இதை எப்படிச் செய்யப் போனார்கள்? யெகோவாவோடு ஒரு மீட்பு உடன்படிக்கையில் வாழ்வதன் மூலம் செய்தார்கள். ஆபிரகாமுடனான இந்த



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

உடன்படிக்கையின் மைய அக்கறைகளை நாம் முதலில் பார்க்க வேண்டும், பின்னர் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் ஆபிரகாமுடனான உடன்படிக்கையை சார்ந்திருந்த வழிகளை ஆராய முடியும்.

## மைய கவலைகள்

ஆபிரகாமுடனான உடன்படிக்கையை தேவன் ஒரு விசேஷ தேசத்தைத் தேர்ந்தெடுத்தார் என்று சுருக்கமாகச் சொல்லலாம். தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாக இஸ்ரவேலை ஸ்தாபித்தலானது இந்த தேசத்திற்கு தேவனிடமிருந்து இரண்டு முக்கிய ஆசீர்வாதங்களை உள்ளடக்கியது. தேவன் ஆபிரகாமுக்கு பல சந்ததிகளையும் ஒரு விசேஷ தேசத்தையும் வாக்களித்தார். ஆதியாகமம் 15 மற்றும் 17-ல், ஆபிரகாமுடன் தேவன் செய்த உடன்படிக்கை, இஸ்ரவேலர் பல சந்ததியினரைப் பெருக்கவும், சிறிது நிலத்தைக் கைப்பற்றவும் வழி காட்டியது. தேவனுடைய ராஜ்யத்தை உலகம் முழுவதும் விரிவுபடுத்துவதற்கான ஒரு தொடக்கப் புள்ளியாக இந்த ஒரு விசேஷ தேசத்தின் பெருக்கமும் உடைமையும் இருந்தது. இந்த புள்ளியிலிருந்து ஆபிரகாமின் சந்ததியினரும் தேசமும் வேதாகம வரலாற்றில் முக்கிய இடத்தைப் பிடித்தன.

## தீர்க்கதரிசிகளின் சார்பு

ஆபிரகாமுக்கு அநேக சந்ததியினரும், விசேஷமான தேசமும் கொடுக்கப்பட்டதை நாம் கண்டோம். பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் ஆபிரகாமுடனான இந்த உடன்படிக்கையை எவ்வாறு சார்ந்திருந்தார்கள்? என்பதை நாம் கேட்க வேண்டும். இந்த உடன்படிக்கையைப் பற்றி அவர்கள் என்ன நம்பினார்கள்? பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசிகள் தேவனுக்கும் ஆபிரகாமுக்கும் இடையிலான உடன்படிக்கையின் நியமங்களை மீண்டும் மீண்டும் எடுக்கிறார்கள். இந்த உடன்படிக்கையின் நிலையான முக்கியத்துவம் எல்லா தீர்க்கதரிசிகளிடமும் கருதப்படுகிறது. தேசத்தைப் பற்றிய வாக்குத்தத்தத்தைப் பற்றியும், ஏராளமான சந்ததியினரின் வாக்குறுதியைப் பற்றியும் அவர்கள் அடிக்கடி பேசினார்கள்.

உதாரணமாக, ஏசாயா 41:8-ல் தீர்க்கதரிசி இஸ்ரவேல் மக்களை இவ்வாறு குறிப்பிடுகிறார்:

> என் தாசனாகிய இஸ்ரவேலே, நான் தெரிந்துகொண்ட யாக்கோபே, என் சிநேகிதனான ஆபிரகாமின் சந்ததியே (ஏசாயா 41:8).

ஏசாயாவின் சிந்தனையில் இஸ்ரவேல் தேசம், அவருடைய காலத்திலேயே ஆபிரகாமின் உடன்படிக்கையின் உண்மையான வாரிசாக



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இருந்தது. அவ்வாறே, ஆபிரகாமுடனான உடன்படிக்கையை ஓசியா குறிப்பிடுகிறார். 1:10 ல் அவர் பின்வருமாறு கூறுகிறார்.

> சிறையிருப்புக்குப் பிறகு, இஸ்ரவேல் புத்திரரின் தொகை அளக்கவும் எண்ணவுங்கூடாத கடற்கரை மணலைப்போலிருக்கும்; நீங்கள் என் ஜனமல்ல என்று அவர்களுக்குச் சொல்வதற்குப் பதிலாக நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய பிள்ளைகள் என்று அவர்களுக்குச் சொல்லப்படும் (ஓசியா 1:10).

தீர்க்கதரிசிகள் ஆபிரகாமுடனான உடன்படிக்கையை பெரிதும் சார்ந்திருந்தனர் என்பதை இது போன்ற குறிப்புகள் நிரூபிக்கின்றன. தேவன் தம்முடைய ஜனங்களுக்கு நிலத்தைக் கொடுப்பதைப் பற்றியோ அல்லது அவர்களின் எண்ணிக்கையைப் பெருக்குவதைப் பற்றியோ அவர்கள் பேசும்போதெல்லாம், ஆபிரகாமுடன் தேவன் செய்த உடன்படிக்கையை அவர்கள் நினைவுகூர்ந்தார்கள். பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசிகளில் ஆபிரகாம் பெயரால் ஏழு முறை மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளார், ஆனால் ஆபிரகாமின் உடன்படிக்கையின் இறையியல் அவர்களின் ஊழியங்களில் ஊடுருவியது.

## மோசே

ஆபிரகாமின் உடன்படிக்கை இஸ்ரவேல் மக்களுடனான முதலாவது உடன்படிக்கையாக இருந்தது, ஆனால் அதைத் தொடர்ந்து மோசேயுடன் செய்த உடன்படிக்கை இரண்டாவதாக வந்தது. நம் காலத்தில், மோசேயின் உடன்படிக்கை எப்போதும் நேர்மறையான ஒளியில் காணப்படுவதில்லை, ஆனால் சத்தியத்திற்கு அப்பால் எதுவும் இருக்க முடியாது. மோசேயின் உடன்படிக்கை மனித இனத்தின் நேர்மறையான மீட்பில் முக்கிய பங்கு வகிக்கிறது. மோசேயின் உடன்படிக்கையின் மையக் காரியங்களை நாம் மீண்டும் பார்க்க வேண்டும், பின்னர் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் இந்த உடன்படிக்கையை எவ்வாறு சார்ந்திருந்தனர் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

### மைய கவலைகள்

மோசேயுடனான ஏற்பாடு தேவனுடைய நியாயப்பிரமாணத்தில் கவனம் செலுத்துகிறது. தேவனுடைய நியாயப்பிரமாணம் இஸ்ரவேலில் உடன்படிக்கை வாழ்க்கையை நிர்வகிக்கும் ஒழுங்குமுறைகளை வழங்கியது. இந்த உடன்படிக்கை யாத்திராகமம் 19-24 இல் மிகத் தெளிவாகக் காணப்படுகிறது, அங்கு உடன்படிக்கையின் புத்தகம் மற்றும் பத்து கட்டளைகளுடன்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

உடன்படிக்கை தொடங்கப்பட்டது. லேவியராகமம் புத்தகத்தின் வழிபாட்டு விதிமுறைகளிலும் இது காணப்படுகிறது. உபாகமம் புத்தகத்தில் மோசேயின் மரணத்தின் போது இஸ்ரவேலின் உடன்படிக்கை புதுப்பிக்கப்பட்டதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. எளிமையாகச் சொல்வதானால், மோசேயின் உடன்படிக்கை உடன்படிக்கை வாழ்க்கையின் ஒழுங்குமுறைகளிலும் பெரிய தெய்வீகமான ராஜாவிடமிருந்து ஆசீர்வாதத்திற்கும் சாபத்திற்கும் வழிவகுக்கும் சட்டங்களிலும் கவனம் செலுத்தியது.

## தீர்க்கதரிசிகளின் சார்பு

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் மோசேயின் உடன்படிக்கையை எப்படிச் சார்ந்திருந்தார்கள்? பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் மோசேக்கும் அவரது பிரமாணத்திற்கும் ஆழ்ந்த கடன்பட்டிருந்தனர், ஏனெனில் அவரது பிரமாணம் இஸ்ரவேல் தேசத்தை தீர்க்கதரிசிகள் விமர்சிப்பதற்கான முக்கிய தரநிலைகளை வழங்கியது. மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கு உண்மையாக இருக்க வேண்டிய பொறுப்பை இஸ்ரவேலருக்கு நினைவூட்டுவதன் மூலம் தீர்க்கதரிசிகள் உடன்படிக்கையை நிறைவேற்றினர். அடுத்த பாடத்தில் நாம் பார்க்கப்போவது போல, தீர்க்கதரிசிகள் தேவனுடைய ஜனங்களுக்கு அறிவித்த குறிப்பிட்ட ஆசீர்வாதங்கள் மற்றும் சாபங்கள் கூட பெரும்பாலும் மோசேயுடனான உடன்படிக்கையிலிருந்து வந்தவை. மோசேயின் பிரமாணங்கள் ஒரு தீர்க்கதரிசியின் வணிகத்தின் முதன்மை கருவிகளாக மாறின.

எடுத்துக்காட்டாக, தேவனுடைய ஜனங்கள் கர்த்தருக்குத் துரோகம் செய்தார்கள் என்பதை ஏசாயா சுட்டிக்காட்ட விரும்பியபோது, மோசேயின் நியாயப்பிரமாணத்தை ஒரு அதிகாரப்பூர்வ அளவுகோலாக அவர் முறையிட்டார். ஏசாயா 5:24-ல் தேவன் இவ்வாறு கூறுகிறார்:

> அவர்கள் சேனைகளின் கர்த்தருடைய வேதத்தை வெறுத்தார்கள் (ஏசாயா 5:24).

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் தேவனுடைய தூதுவர்களாக இருந்ததால், மோசேயுடனான உடன்படிக்கையை மீறிய விதங்களுக்கு இஸ்ரவேலை பொறுப்பேற்குமாறு அழைத்ததால், மோசேயையும் அவரது நியாயப்பிரமாணத்தையும் பற்றிய இந்த வகையான குறிப்பு தீர்க்கதரிசன புத்தகங்களில் எண்ணற்ற முறை காணப்படுகிறது.

# தாவீது

இஸ்ரவேலுக்கு ஒரு தேசமாக வழங்கப்பட்ட கடைசி பழைய ஏற்பாட்டு உடன்படிக்கை தாவீதுடன் தேவன் செய்த உடன்படிக்கையாகும். ஆபிரகாமின்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

உடன்படிக்கையானது சந்ததிகள் மற்றும் நிலத்தில் கவனம் செலுத்தியது. மோசேயுடனான உடன்படிக்கை தேசத்தில் வாழ்வதற்கான சட்டங்களில் கவனம் செலுத்தியது. மோசேயைத் தொடர்ந்து, தேவன் இஸ்ரவேலின் ராஜாவாகிய தாவீதுடன் ஒரு விசேஷ உடன்படிக்கை செய்தார். இந்த உடன்படிக்கையின் முக்கிய காரியங்களையும், தீர்க்கதரிசிகள் அதை எவ்வாறு சார்ந்திருந்தார்கள் என்பதையும் நாம் மீண்டும் பார்க்க வேண்டும்.

## மைய கவலைகள்

தாவீதுடனான உடன்படிக்கையின் முக்கிய காரியங்கள் யாவை? தாவீதின் உடன்படிக்கை தேவனுடைய மக்களை ஒரு மகத்தான சாம்ராஜ்ஜியமாக கட்டியெழுப்புவதில் கவனம் செலுத்தியது. தாவீதுடனான உடன்படிக்கை 2 சாமுவேல் 7, சங்கீதம் 89, சங்கீதம் 132 ஆகிய வேத பகுதிகளில் காணப்படுகிறது. இந்த உடன்படிக்கையின் ஒரு முக்கிய அம்சம் தாவீதின் குடும்பத்தை தேவனுடைய மக்கள் மீது நிரந்தர வம்சமாக நிறுவியது என்பதை இந்த பகுதிகள் தெளிவுபடுத்துகின்றன. தாவீதின் குடும்பத்தில் நிச்சயமாகத் துன்பங்களும் தோல்விகளும் இருந்தன, ஆனால் தேவன் இந்த குடும்பத்தை என்றென்றும் தனது வம்சமாகத் தேர்ந்தெடுத்தார். தாவீதின் சந்ததியினர் ஒரு நாள் உலகளாவிய இரட்சிப்பின் ராஜ்யத்தை நிறுவுவார்கள். இந்த உடன்படிக்கை தேவனுடைய மக்களுக்கு மிகவும் பிரகாசமான வெற்றியையும் பூமியின் மீது மேலாதிக்கத்தையும் வழங்கியது. இன்று கிறிஸ்தவர்களாகிய நாம் இயேசுவை நம்முடைய ராஜாவாகப் பின்பற்றுகிறோம், ஏனென்றால் அவர் தாவீதின் கடைசி பெரிய குமாரனும், தாவீதின் பரிபூரண குமாரனும் ஆவார், அவருடைய ராஜ்யம் ஒருபோதும் முடிவடையாது.

## தீர்க்கதரிசிகளின் சார்பு

தீர்க்கதரிசிகள் தாவீதுடனான இந்த உடன்படிக்கையை எப்படிச் சார்ந்திருந்தார்கள்? என்கிற இன்னொரு கேள்வியை நாம் கேட்க வேண்டும். பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் இஸ்ரவேலுக்குப் பணிவிடை செய்யும்போது தாவீதின் உடன்படிக்கையை அடிக்கடி எடுத்துக் கொண்டனர். தீர்க்கதரிசிகளைப் பொறுத்தவரை, இறுதியில் தாவீதின் ராஜ்யம் ஒரு மகத்தான, உலகளாவிய ராஜ்யமாக இருக்கும் என்று தேவன் வாக்களித்தார். இதை மிகவும் வலுவாக நம்பிய அவர்கள், எதிர்காலத்தில் ஒரு நாள் இது நடக்கும் என்று கணித்தனர். எடுத்துக்காட்டாக, ஆமோஸ் 9:11-ல், தீர்க்கதரிசி சிறையிருப்பிற்குப் பிந்தைய மீட்பு நாட்களை இவ்வாறு விவரிக்கிறார்:

> அந்நாளிலே விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை நான் திரும்ப எடுப்பித்து, அதின் திறப்புகளை அடைத்து, அதில் பழுதாய்ப்போனதைச் சீர்ப்படுத்தி, பூர்வநாட்களில்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> இருந்ததுபோல அதை ஸ்தாபிப்பேன் என்று இதைச் செய்கிற கர்த்தர் சொல்லுகிறார் (ஆமோஸ் 9:11).

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் தாவீதின் உடன்படிக்கையைப் பற்றி பல முறை இவ்வாறு பேசுகிறார்கள். அவருடைய உடன்படிக்கை அவர்களுக்கு மிகவும் முக்கியமானதாக இருந்தது என்பது தாவீதின் பெயரை முப்பத்து நான்கு முறை குறிப்பிட்டனர் என்பதிலிருந்து தெளிவாகிறது.

## புது உடன்படிக்கை

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளும் தங்கள் எதிர்காலத்தில் இருக்கும் ஒரு உடன்படிக்கையைப் பற்றி அறிந்திருந்தார்கள் என்பதை நாம் குறிப்பிடவில்லை என்றால் நிச்சயமாக நாம் தவறு செய்கிறோம் என்று அர்த்தம். தேவன் கிறிஸ்துவின் மூலம் செய்த புதிய உடன்படிக்கையை நான் இங்கே மனதில் வைத்திருக்கிறேன். இந்த புதிய உடன்படிக்கையின் முக்கிய காரியங்கள் யாவை? புதிய உடன்படிக்கையை நிறைவேற்றுதல் என்கிற ஒரு வார்த்தையால் வகைப்படுத்தலாம். ஆபிரகாம், மோசே, தாவீது ஆகியோருடனான முந்தைய உடன்படிக்கைகளில் தேவனுடைய மக்களுக்குக் கொடுக்கப்பட்ட அனைத்து வாக்குத்தத்தங்களும் புதிய உடன்படிக்கையின் காலத்தில் நிறைவேற்றப்பட வேண்டும். தேவனுடைய ஜனங்கள் எண்ணிலடங்காததாக இருப்பார்கள், பூமி முழுவதையும் தங்கள் தேசமாக சுதந்தரித்துக் கொள்வார்கள். மோசேயின் நியாயப்பிரமாணம் இருதயத்தில் எழுதப்பட்டு, இருதயத்திலிருந்து கீழ்ப்படியப்படும். தாவீதின் பெரிய குமாரன் என்றென்றைக்கும் சிங்காசனத்தில் ராஜாவாக இருப்பார்.

இந்தப் புதிய உடன்படிக்கையால் தீர்க்கதரிசிகளுக்கு எப்படி தாக்கம் ஏற்பட்டது? பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் இந்த மகத்தான உடன்படிக்கையின் நாளுக்காக ஏங்கினர். உதாரணமாக, எரேமியா 31:31-ல் புதிய உடன்படிக்கையைப் பற்றி எரேமியா பின்வருமாறு கூறினார்:

> இதோ, "நாட்கள் வருமென்று" கர்த்தர் சொல்லுகிறார், "அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன்" (எரேமியா 31:31).

இஸ்ரவேல் சிறைப்பட்ட நாட்களில், தேவன் வியத்தகு வழிகளில் தனது உடன்படிக்கையை புதுப்பிப்பார் என்று எரேமியா முன்னறிவித்தார். எசேக்கியேல் தீர்க்கதரிசியும் இந்த எதிர்கால உடன்படிக்கையைப் பற்றி பேசினார். 34 ஆம் அதிகாரத்தில் 25 மற்றும் 26 ஆம் வசனங்களில் இந்த வார்த்தைகளை எசேக்கியேலில் பின்வருமாறு வாசிக்கிறோம்:



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> நான் அவர்களோடு சமாதான உடன்படிக்கைசெய்து;
> அவர்களை ஆசீர்வதிப்பேன் (எசே 34:25, 26).

வரவிருக்கும் மகத்தான இறுதிக்கால உடன்படிக்கையை எதிர்பார்த்து பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் தேவனின் தூதர்களாக பணிவிடை செய்தனர். பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளைப் பற்றி நாம் கற்றுக்கொள்ளும்போது, அவர்கள் இந்த புதிய ஏற்பாட்டு உடன்படிக்கையை மீண்டும் மீண்டும் எதிர்பார்ப்பதைக் காண முடிகிறது.

தேவன் இஸ்ரவேலரோடு ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கைகள் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளை அவர்கள் செய்த எல்லாவற்றிலும் வழிநடத்தின. இஸ்ரவேல் ஜனங்களுக்காக தேவன் ஒரு விசேஷமான பங்கை வைத்திருந்தார் என்பதையும், ஆபிரகாம், மோசே, தாவீது ஆகியோருடனான உடன்படிக்கைகளும், புதிய உடன்படிக்கையும்கூட இஸ்ரவேலரை அந்த விசேஷப் பங்கில் வழிநடத்தியது என்பதை அவர்கள் புரிந்துகொண்டார்கள். ஆகவே, தீர்க்கதரிசிகள் தேவனுடைய ஜனங்களுக்குப் பணிவிடை செய்தபோது, தேவன் தம்முடைய ஜனங்களோடு செய்த இந்த விசேஷ உடன்படிக்கைகளின் வரம்புகளுக்குள் அவர்கள் ஊழியம் செய்தார்கள்.

உடன்படிக்கையின் மக்களைப் பற்றிய இந்தப் பாடத்தில், பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் பொதுவாக மனிதகுலத்துடனும், இஸ்ரவேலருடனும் தேவனுடைய உடன்படிக்கைகளின் தூதுவர்களாக செயல்பட்டதை இதுவரை பார்த்தோம். பூமியின் மக்கள் அனைவரும் ஆதாமுடனும் நோவாவுடனும் உலகளாவிய உடன்படிக்கைகளுக்குக் கீழ்ப்படிந்தனர். ஆனால் மனந்திரும்பிய இஸ்ரவேலர்களும் புறஜாதியினரும் தேவனோடு மிகச் சிறப்பான உடன்படிக்கைகளில் இருந்தார்கள். அவர்கள் மனிதகுலத்தின் மற்ற பகுதிகளிலிருந்து பிரிக்கப்பட்டனர். இந்த நேரத்தில், உடன்படிக்கையின் மக்களின் மற்றொரு அம்சத்தையும் நாம் பார்க்க வேண்டும். உடன்படிக்கைச் சமூகத்தில் இரட்சிப்பை தீர்க்கதரிசிகள் எப்படிப் புரிந்துகொண்டார்கள்?

# உடன்படிக்கையில் இரட்சிப்பு

பெரும்பாலும் நவீன கிறிஸ்தவர்கள் உடன்படிக்கையில் இரட்சிப்பைப் புரிந்துகொள்வது கடினமாகும், ஏனென்றால் தீர்க்கதரிசிகள் பின்பற்றாத வேறுபாடுகளை நாம் செய்கிறோம். மறுமலர்ச்சிவாதத்தின் தாக்கத்தின் கீழ், பல நேரங்களில் நாம் மனித இனத்தை இரட்சிக்கப்பட்டவர்கள் இரட்சிக்கப்படாதவர்கள் என இரண்டு நேர்த்தியான குழுக்களாகப் பிரிக்கிறோம். இப்போது, என்னைத் தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள், அந்த



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வேறுபாடு மிகவும் முக்கியமானது, ஏனென்றால் மக்கள் இரட்சிக்கப்பட்டவர்களாகவோ இரட்சிக்கப்படாதவர்களாகவோ இருக்கலாம். ஆனால் அதே நேரத்தில், பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் நினைத்த வகைகள் இவை அல்ல.

தீர்க்கதரிசிகள் இரட்சிப்பை எவ்வாறு புரிந்துகொண்டார்கள் என்பதைப் புரிந்துகொள்வதற்கான சிறந்த வழிகளில் ஒன்று, உலகில் மூன்று வெவ்வேறு வகையான மக்களுக்கு இடையில் வேறுபாடுகளை ஏற்படுத்துவதாகும்: முதலாவதாக, இஸ்ரவேலின் உடன்படிக்கை சமூகத்திற்கு வெளியே உள்ளவர்கள்; இரண்டாவதாக, இஸ்ரவேலின் கண்ணுக்குத் தெரிந்த உடன்படிக்கைச் சமூகத்தில் இருந்தவர்கள்; மூன்றாவதாக, கண்ணுக்குத் தெரியாத உடன்படிக்கைச் சமூகத்திற்குள் இருந்தவர்கள்.

## வெளி உடன்படிக்கை

உடன்படிக்கைக்கு வெளியே இருந்தவர்களின் முதல் வகையைக் கவனியுங்கள். உண்மையில், தீர்க்கதரிசிகள் பின்பற்றிய மக்களில் இது மிகவும் வெளிப்படையான வகையாகும். இவர்கள் தேவன் இஸ்ரவேலரோடு செய்த உடன்படிக்கைகளுக்கு அப்பாற்பட்டவர்கள். தேவன் இஸ்ரவேல் தேசத்தைத் தேர்ந்தெடுத்து, மோசே, ஆபிரகாம், தாவீது ஆகியோரிடம் விசேஷ உடன்படிக்கைகளை ஏற்படுத்தின போது, இஸ்ரவேலின் இந்த தேர்வு பூமியின் மற்ற ஜாதிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களில் இல்லை என்பதைக் குறிக்கிறது. ரூத், ராகாப் போன்றவர்களைத் தவிர, புறஜாதிகள் தேவனுடைய மக்களிடமிருந்து பிரிக்கப்பட்டனர், எனவே தேசத்துடனான இந்த விசேஷித்த உடன்படிக்கைகளுக்கு வெளியே இருந்தனர். நாம் பார்த்தபடி, புறஜாதிகள் ஆதாம் மற்றும் நோவாவின் உலகளாவிய உடன்படிக்கைகளுக்குக் கட்டுப்பட்டவர்கள் என்று தீர்க்கதரிசிகள் நம்பினார்கள். அந்த உடன்படிக்கைகளில் நியாயத்தீர்ப்பு மற்றும் மீட்பின் அடிப்படை கட்டமைப்புகள் அனைத்து தேசங்களுக்கும் பொருந்தும். ஆனால் அதே நேரத்தில், பழைய ஏற்பாட்டின் நாட்களில், உடன்படிக்கை சமூகத்திற்கு வெளியே உள்ளவர்கள், அல்லது தேவனுடனான இஸ்ரவேலின் சிறப்பு உடன்படிக்கை உறவுக்கு வெளியே, இந்த மக்கள் இரட்சிப்பின் சாத்தியத்திலிருந்து துண்டிக்கப்பட்டனர். அவர்கள் செய்த பாவம் அவர்களை உலகத்தில் நம்பிக்கையின்றி விட்டுவிட்டது.

எபேசியர் புத்தகத்தில் புறஜாதியினரைப் பற்றி பவுல் இவ்வாறு பேசினார். எபேசியர் 2:11-12 இல் அவர் இவ்வாறு கூறுகிறார்:

> ஆனபடியினால் முன்னே மாம்சத்தின்படி புறஜாதியாராயிருந்து, அக்காலத்திலே கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின்

> உடன்படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாயிருந்தீர்களென்று நினைத்துக்கொள்ளுங்கள் (எபேசியர் 2:11-12).

பழைய ஏற்பாட்டு நாட்களில் புறஜாதியினரின் நிலை இதுதான். அவர்கள் உடன்படிக்கைக்கு வெளியே இருந்தார்கள், இஸ்ரவேலுடனான உடன்படிக்கைகளின் மூலம் வந்த இரட்சிப்பின் சாத்தியத்திலிருந்து வெகு தொலைவில் இருந்தனர்.

## காணக்கூடிய உடன்படிக்கை

உடன்படிக்கைக்கு அப்பாற்பட்ட புறஜாதியினரின் வகையைப் புரிந்துகொள்வதில் பெரும்பாலான கிறிஸ்தவர்களுக்கு சிறிய சிக்கல் உள்ளது, ஆனால் தீர்க்கதரிசன கண்ணோட்டத்தில் இரண்டாவது வகை மக்களான இஸ்ரவேல் சமூகத்தில் உள்ளவர்களுக்கு செல்லும்போது சிரமங்கள் எழத் தொடங்குகின்றன என்பதை நான் கண்டறிந்தேன். காணக்கூடிய உடன்படிக்கை சமூகத்தைப் பற்றி நாம் பேசும்போது, பழைய ஏற்பாட்டு நாட்களில் இஸ்ரவேல் தேசத்தின் ஒரு பகுதியாக இருந்த அனைவரையும் மனதில் வைத்திருக்கிறோம். இந்த பிரிவில் உண்மையான விசுவாசிகள் மற்றும் அவிசுவாசிகள் இருவரும் அடங்குவர். இந்த உடன்படிக்கை வகையை அறிமுகப்படுத்துவதற்கான சிறந்த வழிகளில் ஒன்று பழைய புராட்டஸ்டன்ட் இறையியலுக்குத் திரும்புவதாகும்.

பழைய புரோட்டஸ்டன்ட்கள் தீர்க்கதரிசிகள் பயன்படுத்தியதை விட வேறுபட்ட சொற்களைப் பயன்படுத்தியிருந்தாலும், கடந்த காலத்திலிருந்து புராட்டஸ்டன்ட் இறையியலாளர்கள் இஸ்ரவேலின் உடன்படிக்கை சமூகத்தைப் பற்றிய தீர்க்கதரிசிகளின் சிந்தனை முறைக்கு இணையான வழிகளில் திருச்சபையை விவரித்துள்ளனர். ”காணக்கூடிய சபை” என்ற பாரம்பரியப் பெயரை நான் இங்கே மனதில் வைத்திருக்கிறேன். துரதிர்ஷ்டவசமாக, இந்த சொல் இன்று அதிகம் பயன்படுத்தப்படவில்லை, எனவே பழைய புரோட்டஸ்டன்ட்கள் ”காணக்கூடிய சபை” என்பதற்கு என்ன அர்த்தத்தைக் கொடுத்தார்கள் என்பதை நாம் கவனிக்க வேண்டும். *வெஸ்ட்மின்ஸ்டர் விசுவாச அறிக்கை* அத்தியாயம் 25, பத்தி 1 இல் ”காணக்கூடிய சபையை” இவ்வாறு விவரிக்கிறது:

> கண்ணுக்குத் தெரியும் திருச்சபை என்பது உலகெங்கிலும் உள்ள உண்மையான மதத்தைப் பின்பற்றுபவர்களையும் தங்கள் பிள்ளைகளையும் உள்ளடக்கியது; கர்த்தராகிய



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இயேசுகிறிஸ்துவின் ராஜ்யமும் தேவனுடைய குடும்பமுமாயிருக்கிறது.

காணக்கூடிய திருச்சபையைப் பற்றிய இந்த விளக்கம் கண்ணுக்குத் தெரியும் உடன்படிக்கை சமூகத்தின் இரண்டு அம்சங்களைப் பற்றி நம்மை எச்சரிக்கிறது. முதலாவதாக, காணக்கூடிய திருச்சபை உண்மையான விசுவாசிகளை விட அதிகமானவர்களை உள்ளடக்கியுள்ளது. சபைக்கு வரும் பலர் வெறுமனே கிறிஸ்துவைப் பின்பற்றுவதாகக் கூறுகின்றனர், ஆனால் இந்த அவிசுவாசிகள் கிறிஸ்தவ விசுவாசத்துடனான தொடர்பு மூலம் உலகத்திலிருந்து பிரிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் திருச்சபையின் அங்கத்துவத்தில் இருக்கிறார்கள், ஆனால் அவர்கள் இன்னும் தங்கள் பாவங்களிலிருந்து நித்தியமாக மீட்கப்படவில்லை.

இதற்கு அப்பால், கண்ணுக்குத் தெரியும் திருச்சபைக்கு வழங்கப்பட்ட சிறப்பு தலைப்புகளைக் கவனிப்பது முக்கியம். இது நம் காதுகளுக்கு விசித்திரமாகத் தெரிகிறது, ஆனால் பாரம்பரிய புராட்டஸ்டன்ட் இறையியலின்படி, விசுவாசிகள் மற்றும் அவிசுவாசிகளுடன் கலந்த கண்ணுக்குத் தெரியும் திருச்சபையை "திருச்சபை", "ராஜ்யம்," "தேவனுடைய வீடு" மற்றும் "தேவனின் குடும்பம்" என்று அழைக்கப்படுகிறது. தற்கால கிறித்தவ சொற்களஞ்சியத்தில், நாம் பொதுவாக இந்த சொற்களை உண்மையிலேயே இரட்சிக்கப்பட்டவர்களைக் குறிப்பதற்காக பயன்படுத்துகிறோம். ஆனால் பாரம்பரிய இறையியலின்படி, இந்த சொற்கள் கண்ணுக்குத் தெரியும் திருச்சபைக்குள் இருக்கும் இரட்சிக்கப்பட்டவர்களையும் இரட்சிக்கப்படாதவர்களையும் குறிக்கிறது. பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளைப் படிக்கும்போது, அவர்கள் கண்ணுக்குத் தெரியும் இஸ்ரவேல் தேசத்தைப் பற்றி ஒரே மாதிரியாக சிந்தித்தார்கள் என்பதைக் காண்பது கடினம் அல்ல.

காணக்கூடிய உடன்படிக்கை சமூகத்தின் இந்த வகை தீர்க்கதரிசன புத்தகங்களின் பல பகுதிகளைப் புரிந்துகொள்ள நமக்கு உதவுகிறது. எடுத்துக்காட்டாக, ஓசியாவின் முதல் அதிகாரங்கள் கண்ணுக்குத் தெரியும் உடன்படிக்கை சமூகத்தை விவரிக்கப் பயன்படுத்தப்படும் சொற்களின் குறிப்பிடத்தக்க வேறுபாட்டை முன்வைக்கின்றன. 1:3-9-ல், ஓசியா வடக்கு இஸ்ரவேலின் மீது பெரும் சாபங்கள் வரப்போகிறது என்று அறிவிக்கிறார். தனது மூன்று குழந்தைகளுக்கும் பெரும் சாபங்களைக் கணிக்கும் பெயர்களைக் கொடுத்து இதைச் செய்கிறார். யெகூவின் நாட்களில் இஸ்ரவேலில் நிகழ்ந்த அழிவை நினைவுகூர்ந்து, ஒரு குழந்தைக்கு யெஸ்ரயேல் என்று பெயரிட்டார். தேவன் இஸ்ரவேலை அழிக்கப் போவதாக மிரட்டுகிறார் என்பதை இந்தக் குழந்தை அடையாளப்படுத்தியது. ஓசியா தனது இரண்டாவது குழந்தைக்கு லோ-ருஹாமா என்று பெயரிட்டார். அவள்

பெயருக்கு "தேவனால் நேசிக்கப்படவில்லை" என்று பொருள். இந்தப் பின்னணியில், அன்பு என்பது தேவனுக்கும் அவருடைய மக்களுக்கும் இடையிலான ஆசீர்வாதத்தின் நேர்மறையான உடன்படிக்கை உறவை விவரிக்கும் ஒரு சொல்லாகும். தேவனுடைய உடன்படிக்கை ஆசீர்வாதங்கள் விரைவில் தேசத்திலிருந்து விலக்கிக் கொள்ளப்படும் என்பதை இந்த குழந்தை அடையாளப்படுத்தியது. ஓசியாவின் மூன்றாவது குழந்தைக்கு லோ-அம்மி என்று பெயரிடப்பட்டது, "என் மக்கள் அல்ல" என்பது இதற்குப் பொருளாகும். இஸ்ரவேல் மக்களிடமிருந்து தனது உடன்படிக்கை ஆசீர்வாதங்களைத் திரும்பப் பெறுவதன் மூலம் தேவன் தனது மக்களை மறுதலிப்பார் என்ற அச்சுறுத்தலை இந்த குழந்தை அடையாளப்படுத்தியது.

அதேசமயம், தேவனுடைய சிறையிருப்பு நியாயத்தீர்ப்பின் கீழ் வரவிருந்தவர்களுக்கும் ஓசியா நம்பிக்கை கொடுத்தார். இஸ்ரவேல் மக்களுக்கு ஒரு நாள் தேசத்தின் மறுசீரமைப்பு நடைபெறும் என்று தீர்க்கதரிசி உறுதியளித்தார். இந்த நம்பிக்கையை வெளிப்படுத்துவதற்காக, ஓசியா தன் பிள்ளைகளுக்குக் கொடுத்த பயங்கரமான பெயர்களை மீண்டும் நினைவுகூர்ந்தார். 1:10-ல், யெஸ்ரயேல் மீண்டும் நிகழும் என்று அவர் கூறுகிறார், ஆனால் இந்த முறை தேவன் தனது மக்களுக்கு எதிராகப் போரிடுவார் என்று அவர் அர்த்தப்படுத்தவில்லை. மாறாக, தேவன் இஸ்ரவேலின் எதிரிகளுக்கு எதிராகப் போரிடுவார். இதற்கு அப்பால், சிறைப்பட்ட பிறகு தேவன் இஸ்ரவேலர்களை அவர்களுடைய தேசத்திற்குத் திருப்பி அனுப்பும்போது, 2:1 இன் படி அவர்களுக்கு ருஹாமா என்று பெயரிடுவார். அந்நாளில், "என் மக்கள் அல்ல" என்று அழைக்கப்பட்டவர்கள் "என்னுடைய மக்கள்" ஆவார்கள்.

கண்ணுக்குத் தெரியும் உடன்படிக்கை சமூகத்தைப் பற்றி ஓசியா முரண்பட்ட சொற்களில் பேசுகிறார் என்பதைப் பார்ப்பது முக்கியம். ஓசியா இந்த ஜனங்கள் இரட்சிப்பைப் பெற்று பின்னர் அதை இழந்து மீண்டும் இரட்சிப்பைப் பெற்றவர்கள் என்று பேசவில்லை என்பதை வேதாகமத்தின் எஞ்சிய பகுதி தெளிவுபடுத்துகிறது. மாறாக, இது உடன்படிக்கை மொழியாகும். இந்த சிறப்பு தலைப்புகளுடன், தேவன் தனது உடன்படிக்கை ஆசீர்வாதங்களை திரும்பப் பெறுவார், ஆனால் ஒரு நாள் தனது உடன்படிக்கையை புதுப்பிப்பார், இஸ்ரவேல் மீண்டும் தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெறும் என்று ஓசியா அறிவிக்கிறார்.

தீர்க்கதரிசிகள் இஸ்ரவேலின் கண்ணுக்குத் தெரியும் உடன்படிக்கை சமூகத்திற்குப் பயன்படுத்திய உண்மையான விசுவாசிகளைக் குறிப்பிடுவதற்கு நாம் பொதுவாக பல சொற்களை ஒதுக்குகிறோம். "தெரிந்தெடுத்தல்" அல்லது "தேர்ந்தெடுப்பு" போன்ற சொற்களைப் பயன்படுத்தும்போது, நாம் பொதுவாக இரட்சிப்பிற்காகத் தேர்ந்தெடுப்பதாக என்று பொருள்படுகிறோம். ஆனால் தீர்க்கதரிசிகள் பெரும்பாலும் இந்த அர்த்தத்தில் பேசவில்லை. அதற்கு பதிலாக, கண்ணுக்குத் தெரியும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

உடன்படிக்கை சமூகத்தில் உள்ள மக்கள் உண்மையான விசுவாசிகளாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் ”தெரிந்தெடுக்கப்பட்ட” அல்லது ”தேர்ந்தெடுக்கப்பட்ட” என்ற வார்த்தையைப் பயன்படுத்தினர். இந்த காரணத்திற்காக, ஏசாயா 14:1 இல் பின்வரும் வார்த்தைகளை வாசிக்கிறோம்:

> கர்த்தர் யாக்கோபுக்கு இரங்கி, பின்னும் இஸ்ரவேலரைத் தெரிந்துகொள்வார் (ஏசாயா 14:1).

இஸ்ரவேல் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படும் என்று ஏசாயா சொன்னதைக் கவனியுங்கள். இது நம் காதுகளுக்கு விசித்திரமாகத் தோன்றுவதைப் போலவே, தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளில் மக்கள் தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்டு, நிராகரிக்கப்படலாம், பின்னர் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படலாம். ஏனென்றால், தீர்க்கதரிசன சொற்களஞ்சியத்தில் தேவனுடைய தெரிந்தெடுத்தலானது இரட்சிப்பிற்கான தெரிந்தெடுத்தல் அல்ல, மாறாக உடன்படிக்கை ஆசீர்வாதத்திற்கான தெரிந்தெடுத்தலாகும். தெரிவு செய்யப்பட்டவர்கள் கண்ணுக்குத் தெரிந்த உடன்படிக்கைச் சமூகத்தில் இருந்தவர்கள், அந்த சமூகத்தில் விசுவாசிகளும் அவிசுவாசிகளும் அடங்குவர். புதிய ஏற்பாட்டில் கூட, சில நேரங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட என்கிற சொல் இந்த வழியில் பயன்படுத்தப்படுகிறது. யோவான் 6:70-ல் இயேசு இவ்வாறு கூறுகிறார்:

> பன்னிருவராகிய உங்களை நான் தெரிந்துகொள்ளவில்லையா? உங்களுக்குள்ளும் ஒருவன் பிசாசாயிருக்கிறான் என்றார். (யோவான் 6:70).

யூதாசையும் மற்ற அப்போஸ்தலர்களையும் ஆசீர்வாதத்தின் ஒரு விசேஷித்த உடன்படிக்கை உறவுக்கு அழைத்ததைப் பற்றி இயேசு பேசுகிறார். நித்திய இரட்சிப்பைப் பற்றி அவர் பேசவில்லை.

## கண்ணுக்குத் தெரியாத உடன்படிக்கை

இப்போது நாம் மக்களின் மூன்றாவது வகையான கண்ணுக்குத் தெரியாத உடன்படிக்கை சமூகத்திற்கு வருகிறோம். மீண்டும், பாரம்பரிய புராட்டஸ்டன்ட் இறையியல் இந்த பகுதியில் நமக்கு சில உதவிகளை வழங்குகிறது. கண்ணுக்குத் தெரியும் சபைக்குள், ”கண்ணுக்குத் தெரியாத சபை” என்று அழைக்கப்படும் ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட குழு உள்ளது. *வெஸ்ட்மின்ஸ்டர் விசுவாச பிரமாணத்தில்,* அத்தியாயம் 25, பத்தி 1 இல், கண்ணுக்குத் தெரியாத சபை பின்வருமாறு சித்தரிக்கப்பட்டுள்ளது:

> இது தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கையையும் உள்ளடக்கியது, அவர்கள்

> கிறிஸ்துவின் கீழ், அவருடைய தலைமையின் கீழ் இருந்தவர்கள், இருக்கிறவர்கள், அல்லது ஒன்று சேர்க்கப்படப் போகிறவர்கள்; அவர்கள் எல்லாவற்றையும் நிரப்புகிற அவரின் மணவாட்டியாகவும், சரீரமாகவும் இருக்கிறார்கள்.

இந்த விசுவாச பிரமாணத்தில், கண்ணுக்குத் தெரியாத திருச்சபை தேவனுடைய கண்ணோட்டத்தில் விவரிக்கப்படுகிறது. இது நித்திய கண்ணோட்டத்தில் விசுவாசத்தில் இரட்சிப்புக்குள் வருகிற மற்றும் தேவனுடைய ஆசீர்வாதத்தில் நித்தியத்தை கழிக்கும் மனிதர்களின் முழு எண்ணிக்கை என்று வரையறுக்கப்படுகிறது.

கண்ணுக்குத் தெரியாத திருச்சபையைப் பற்றிய இந்த விளக்கத்திலிருந்து, குறைந்தபட்சம் இரண்டு அடிப்படைக் கருத்துக்களை நாம் காணலாம். முதலாவதாக, கண்ணுக்குத் தெரியாத திருச்சபை உண்மையான விசுவாசிகளால் மட்டுமே ஆனது. இந்த உண்மையான விசுவாசிகள் கண்ணுக்குத் தெரியும் சபைக்குள் இருக்கிறார்கள், ஆனால் அவர்கள் இரட்சிப்பைப் பெற்றிருக்கிறார்கள், இதன் விளைவாக அவர்கள் கண்ணுக்குத் தெரியாத திருச்சபையின் சிறிய சமூகத்திற்குள் நுழைகிறார்கள். இரண்டாவதாக, கண்ணுக்குத் தெரியாத சபையில் இரட்சிக்கப்பட்டவர்கள் இருக்கிறார்கள். இந்த மக்கள் கிறிஸ்துவின் சேவைக்கு தங்கள் இருதயங்களை அர்ப்பணித்திருப்பதால், அவர்களின் இரட்சிப்பு இறுதி வரை உறுதியாக இருக்கும்.

அப்போஸ்தலனாகிய பவுல் இஸ்ரவேல் தேசத்திற்குள்ளும் கண்ணுக்குத் தெரியும் உடன்படிக்கைச் சமூகத்திற்கும் இடையே இத்தகைய வேறுபாட்டைச் சுட்டிக் காட்டினார். ரோமர் 9-ம் அதிகாரம், 6, 7-ம் வசனங்களில் அவர் பின்வருமாறு கூறுகிறார்:

> இஸ்ரவேல் வம்சத்தார் எல்லாரும் இஸ்ரவேலரல்லவே. அவர்கள் ஆபிரகாமின் சந்ததியாரானாலும் எல்லாரும் பிள்ளைகளல்லவே (ரோமர் 9:6-7).

ஆபிரகாமின் சரீரக் குழந்தையாக இருப்பது உங்களை இஸ்ரவேல் தேசத்திற்குக் கொண்டுவரக்கூடும், ஆனால் இரட்சிப்பைக் கொண்டுவர அது போதுமானதாக இல்லை என்பது தான் பவுலின் யோசனையாகும். ஆபிரகாமைப் போலவே ஆபிரகாமின் உண்மையான பிள்ளைக்கும் இரட்சிப்பிற்கு ஏற்ற விசுவாசம் இருக்க வேண்டும். இந்த காரணத்திற்காக, இஸ்ரவேலுக்குள் ஒரு இஸ்ரவேல் இருப்பதைப் பற்றி நாம் பேசலாம். அதாவது தேவனுடைய மக்களின் கண்ணுக்குத் தெரியும் சமூகத்திற்குள் தேவனுடைய கண்ணுக்குத் தெரியாத, மீட்கப்பட்ட மக்கள் இருக்கிறார்கள்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

கண்ணுக்குத் தெரியாத திருச்சபை பற்றிய இந்த கருத்து பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளின் சிந்தனைக்கு இணையாக உள்ளது. அவர்கள் இஸ்ரவேல் மக்களைப் பார்த்து, கண்ணுக்குத் தெரியாத உடன்படிக்கை சமூகம் இருப்பதாக நம்பினார்கள். இஸ்ரவேல் தேசத்தினுள் சிலர் எப்பொழுதும் உண்மையுள்ளவர்களாக இருந்தார்கள்; அவர்கள் இரட்சிக்கப்பட்டவர்களின் செயல்களில் ஈடுபட்டதால் அவர்கள் உண்மையுள்ள மக்களாக இருந்தார்கள். தேசம் முழுவதுமே தேவனிடமிருந்து பயங்கரமான நியாயத்தீர்ப்பின் காலங்களைச் சந்தித்தபோது கூட அவர்களின் நித்திய விதிகள் பாதுகாப்பாக இருந்தன. காணக்கூடிய உடன்படிக்கை சமூகத்தில் மீட்கப்பட்ட மக்களின் இந்த வேறுபாடு தீர்க்கதரிசிகள் எழுதிய பல பகுதிகளில் தெளிவாகிறது.

கண்ணுக்குத் தெரிந்த உடன்படிக்கைச் சமூகத்தில் வெறும் வெளிப்புறமாக மட்டுமே இருந்த இஸ்ரவேலர்களையும், உண்மையிலேயே மனந்திரும்பி, கண்ணுக்குத் தெரியாத, உண்மையான விசுவாசிகளில் ஒருவராக இருந்தவர்களையும் தீர்க்கதரிசிகள் வேறுபடுத்திக் காட்டினார்கள். எடுத்துக்காட்டாக, எரேமியா 4:4-ல், கண்ணுக்குத் தெரியும் யூதா தேசத்தை நோக்கி எழுதப்பட்ட இந்த வார்த்தைகளை வாசிக்கிறோம்:

> யூதா மனுஷரே, எருசலேமின் குடிகளே, உங்கள் கிரியைகளுடைய பொல்லாப்பினிமித்தம் என் உக்கிரம் அக்கினியைப்போல எழும்பி, அவிப்பார் இல்லாமல் எரியாதபடிக்கு நீங்கள் கர்த்தருக்கென்று உங்களை விருத்தசேதனம்பண்ணி, உங்கள் இருதயத்தின் நுனித்தோலை நீக்கிப்போடுங்கள் (எரேமியா 4:4).

எரேமியா யூதா மக்களுக்கு ஊழியம் செய்தபோது, இஸ்ரவேல் மக்கள் அனைவரும் சரீர விருத்தசேதனம் செய்யப்பட்டனர். இந்த காரணத்திற்காக, அவர்களும் அவர்களின் குடும்பங்களும் கண்ணுக்குத் தெரிந்த உடன்படிக்கை சமூகத்தில் இருந்தனர். அதேசமயம், யூதா மக்களில் அநேகருடைய இருதயங்கள் தேவனுக்கு விரோதமாக இருந்தது என்பதை எரேமியா அறிந்திருந்தார். எனவே, உண்மையான விசுவாசத்தின் மூலம் அவர்களின் இருதயங்களை விருத்தசேதனம் செய்வதன் மூலம் தேவனுடைய கோபத்திலிருந்து இரட்சிக்கப்பட வேண்டும் என்று அவர் அவர்களை அறிவுறுத்தினார்.

எசேக்கியேல் தீர்க்கதரிசியும் இந்த வேறுபாட்டை மிகத் தெளிவாக விளக்குகிறார். எசேக்கியேல் 18:31-ல் அவர் இவ்வாறு கூறினார்:

> நீங்கள் துரோகம்பண்ணின உங்களுடைய எல்லாத் துரோகங்களையும் உங்கள்மேல் இராதபடிக்கு விலக்கி, உங்களுக்குப் புது இருதயத்தையும் புது ஆவியையும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> உண்டுபண்ணிக்கொள்ளுங்கள். இஸ்ரவேல் வம்சத்தாரே, நீங்கள் ஏன் சாகவேண்டும்? (எசேக்கியேல் 18:31).

எசேக்கியேல் இஸ்ரவேலின் பௌதீகப் பிள்ளைகளாக இருந்த மக்களோடு பேசினார், ஆனால் அவர்கள் நித்திய ஜீவனுக்குக் கட்டுப்பட்ட மீட்கப்பட்ட மக்கள் என்று அர்த்தமல்ல. இந்த காரணத்திற்காக, தீர்க்கதரிசி ஆழ்ந்த மனந்திரும்பலுக்கு அழைப்பு விடுக்கிறார்.

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளைப் படிக்கும் போதெல்லாம், உடன்படிக்கையுடன் தொடர்புடைய இரட்சிப்பை அவர்கள் எவ்வாறு புரிந்துகொண்டார்கள் என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். உடன்படிக்கையில் இருப்பது மீட்கப்படுவதற்கு அல்லது நித்தியமாக இரட்சிக்கப்படுவதற்கு சமமானதல்ல. பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் மக்களை வகைப்படுத்தியபோது, அவர்கள் முதலில் இஸ்ரவேலின் தேசத்திற்கு வெளியே இருந்த புறஜாதிகளை நினைத்தனர். அவர்கள் இஸ்ரவேலுக்கு வந்து தேவனிடத்தில் இரட்சிப்பைக் காணாதவரை, அவர்கள் தொலைந்துபோனவர்களாகவும், நம்பிக்கையற்றவர்களாகவும் இருந்தார்கள்.

இஸ்ரவேல் தேசம் தேவனின் பார்வையில் மிகவும் விசேஷமானது என்பதை தீர்க்கதரிசிகள் அறிந்திருந்தார்கள். அதில் இஸ்ரவேலின் சரீர பிள்ளைகளும், இஸ்ரவேலின் மதத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த புறஜாதிகள் அனைவரும் இருந்தனர். இந்த வெளிப்படையான உடன்படிக்கை சமூகத்தில் உண்மையான விசுவாசிகளும், அவிசுவாசிகளும் இருந்தனர், ஆனால் ஆபிரகாம், மோசே மற்றும் தாவீது ஆகியோருடனான உடன்படிக்கைகளின் ஆசீர்வாதங்களையும் பொறுப்புகளையும் அனுபவிக்க தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சமூகமாக அது இருந்தது. மக்கள் இரட்சிப்பைக் காணும் களம் இது.

இதைத் தாண்டி, தீர்க்கதரிசிகளின் சிந்தனையிலும் மூன்றாவது பிரிவும் ஆதிக்கம் செலுத்தியது. இஸ்ரவேல் தேசத்திற்குள் கண்ணுக்குத் தெரியாத ஒரு சமூகம் இருப்பதை தீர்க்கதரிசிகள் அறிந்திருந்தார்கள். தேவனுடைய மக்களில் உண்மையிலேயே விசுவாசித்த நீதியுள்ள மீதியுள்ளவர்கள் இவர்களே. அவர்கள் கடினமான காலங்களை கடந்து சென்றாலும், மீதியானவர்கள் பெரும்பாலும் பரிபூரணத்திலிருந்து வெகு தொலைவில் இருந்தாலும், அவர்கள் ஆபிரகாமைப் போல கர்த்தரை நம்பினார்கள், மேலும் அவர்கள் தங்கள் விசுவாசத்தால் மட்டுமே நீதிமான்களாக்கப்பட்டனர்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# முடிவுரை

நாம் தீர்க்கதரிசன புத்தகங்களைப் படிக்கும் போதெல்லாம் உடன்படிக்கைக்கு வெளியே உள்ளவர்கள், கண்ணுக்குத் தெரியும் உடன்படிக்கை தேசம் மற்றும் கண்ணுக்குத் தெரியாத உடன்படிக்கை மக்கள் ஆகிய இந்த வேறுபாடுகளை மனதில் கொள்ள வேண்டும். இந்த வேறுபாடுகளை நாம் ஒருபோதும் மறக்காவிட்டால், நாம் அதிக குழப்பங்களைத் தவிர்க்கலாம், தீர்க்கதரிசிகளின் செய்தியைப் பற்றிய மகத்தான நுண்ணறிவுகளைப் பெறலாம்.

இந்த பாடத்தில், தீர்க்கதரிசிகள் உடன்படிக்கையின் மக்களைப் புரிந்துகொண்ட விதம் தொடர்பான பல கருப்பொருள்களைத் தொட்டுள்ளோம். ஆதாமுடனும் நோவாவுடனும் உடன்படிக்கை செய்து கொண்ட போதிலும், எல்லா மக்களும் கர்த்தருக்குள் இருந்தவர்கள் என்று அவர்கள் நம்பியதை நாம் கண்டோம். ஆனால், ஆபிரகாம், மோசே, தாவீது ஆகியோருடனான உடன்படிக்கைகள் மற்றும் கிறிஸ்துவில் உள்ள புதிய உடன்படிக்கை காரணமாக இஸ்ரவேலர் தேவனுடன் மிகவும் சிறப்பான உறவைக் கொண்டிருந்தனர். நமக்கு பெரும்பாலும் தெரியாத வேறுபாடுகளை தீர்க்கதரிசிகள் செய்ததையும் நாம் கவனித்திருக்கிறோம். உடன்படிக்கைக்கு வெளியே இருப்பவர்கள், உடன்படிக்கையில் நம்பிக்கையற்றவர்கள், உடன்படிக்கைக்குள் உண்மையான விசுவாசிகளாக இருந்தவர்கள் என உலகில் மூன்று வகையான மக்களைப் பற்றி அவர்கள் சிந்தித்தனர். இந்த வேறுபாடுகளையும், தீர்க்கதரிசிகள் தேவனுடைய மக்களை எவ்வாறு புரிந்துகொண்டார்கள் என்பதையும் நாம் நினைவில் கொள்ளும்போது, தீர்க்கதரிசன வார்த்தையை நம் காலத்திலும் புரிந்துகொள்ளவும் பயன்படுத்தவும் முடியும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.